4 நவம்பர் 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொது காலம் 31ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

மாதாந்திர கருப்பொருள்:

## கிறிஸ்துவில் புனிதராவதற்கான அழைப்பு

# தன்னையும் மிஞ்சிச் செல்வது

பெரும்பாலும் நாம் தனித்து வாழ விழைகிறோம். கணக்கிலடங்கா கனவுகளோடு, நமது சொந்த ஆசைகளைப் பூர்த்திச் செய்யும் பேரின்பத்தை நோக்கி அலைகிறோம். எப்படியாவது இன்பம் காண வேண்டுமென்பது நமது இறுதி நோக்கமாகவும் லட்சியமாகவும் இருக்கிறது. இந்த குறிகோளை அடையவதில் நம்மைத் தடுப்பவருக்கு கேடும் அவமானமும்தான் மிஞ்சும்.



ஆயினும், தமது சொந்த அவாவை நோக்கி செல்லும் பாதையில் மற்றவர்கள் தடைக்கல்லாக இருப்பார்கள். குறிப்பாக மற்றவர்களின் விருப்பத்தோடு நமது ஆசைகளும் மோதும் போது, முட்டுக்கட்டைக்கு இட்டுச் செல்வதோடு, உறவிலும் விரிசல் ஏற்படும். கணவன்-மனைவி, குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், சகாக்கள் ஏன் 'கிறிஸ்துவர்கள்' ஆகி நம்மிடையேயும் இது நிகழலாம். இம்மாதிரியான சூழ்நிலையில் கிறிஸ்துவ ஒற்றுமைக்குப் பங்கம் ஏற்படும். 'வளம் பெறும் நற்செய்தி' ஊக்குவிக்கும் சுயநல உணர்வு இதனை இன்னும் மோசமாக்கும். பிரபலத்தையும் சுய கௌவரத்தையும் நாடும் சில திருச்சபை தலைவர்களும் இதற்கு பலியாகி விடுகின்றனர்

மத்தேயு 20:28 கூறுகிறது, கிறிஸ்து சேவை செய்யவே வந்தார், அனைவருக்காகவும் தமது உயிரையே தந்தார். ஒவ்வொரு கிறிஸ்துவனுக்கும் அவர் ஓர் எடுத்துக்காட்டு. நமது அன்றாட வாழ்க்கை போராட்டத்தில் அவர், நமக்குத் தடைக்கல்லாக இருக்கிறார். கிறிஸ்து காட்டும் வாழ்க்கைக்கு உழைப்பு, தியாகம், விடாமுயற்சி தேவைப்படுகிறது. வாழ்க்கையில் வரும் பிரச்னைகளுக்கு உடனடி தீர்வும் கிடையாது. அன்றாட வாழ்க்கையில் சிறிதளவு அறம் செய்ய பழகுவதன் வழி இதனை நாம் தொடங்கலாம். இது நம்பிக்கை ஏற்படுத்தும், மற்றவர்களுக்காக உயிரையே கொடுக்கும் அளவுக்கு இட்டுச் செல்லலாம். ஏன்னென்றால், கிறிஸ்துவ வாழ்வு வெறும் வார்த்தை ஜலமல்ல, அது விசுவாச வாழ்க்கை (1அருள.3:18- நாம் சொல்லிலும் பேச்சிலும் அல்ல, செயலில் உண்மையான அன்பை விளங்கச் செய்வோம்).

இம்மாதிரியான விசுவாசத்தில் வாழ்ந்தால், நம்மை தம்மிடம் அழைத்துக் கொள்ளும் இயேசுவின் விருப்பத்தைப் புரிந்து கொள்ள முடியும். 'நீர் இறையாட்சியினின்று தொலைவில் இல்லை' மாற்கு 12:34 மறைநூல் அறிஞரிடம் கூறியது போல. கால ஓட்டத்திலும் வாழ்க்கை முறையிலும், மற்றவர்களோடு நமது வாழ்வு இணைக்கப்பட்டிருக்கும் முக்கியத்துவத்தைப் புரிந்து கொள்ள முடியும். இதனால்தான், திருப்பலி இறுதியில், **'சென்று வாருங்கள், பணிபுரிய'** எனக் கூறப்படுகிறது. அயலாருக்குக் காட்டும் அன்பு, கடவுளின் தியாக அன்புக்கு ஈடாக இருப்பதை நாம் உணரும் போது இதன் மகிமையை காண்போம். ✝

> **கிறிஸ்துவன் என அழைப்பதை விட, கிறிஸ்துவனாக இருக்க விரும்புகிறேன்.**
>
> - புனித லயோலா இன்னாசியார்

**வாரம் ஒரு வசனம்**

**'சென்று வாருங்கள், பணிபுரிய'**

INTERNAL CIRCULATION ONLY
BUL 44/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Stenoprint Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

## மினவுதல் மாதா தேவாலயம்
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ


*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்*
***எதிர் நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்.***
*2018 நவம்பர் (கார்த்திகை) மாதத்தின் கருப்பொருள்:*
***கிறிஸ்துவில் புனிதத்துவத்துக்கு அழைப்பு***
**மினவுதல் தேவாலயத்தின் 170 ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
**(1848 - 2018)**

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:** பொதுக்காலம் 31ஆம் ஞயிறு **சனி 03-11-2018 - ஞாயிறு 11-11-2018**
இ.ச: 6: 2 - 6 தி.பா: 17: 2- 3a, 3bc - 4, 47, 51ab எபிரேயர்: 7: 23 - 28 மாற்கு: 12: 18 - 34
**"என் ஆற்றலாகிய ஆண்டவரே ! உம்மிடம் நான் அன்புகூர்கிறேன்" - திபா 17**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 03 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித மார்த்தாள்) | **விவிலியக் கல்வி (Bible Knowledge) :** மதியம் 2.30 மணி ஆலய மண்டபம் மேல் அறை<br>காலை 8 முதல் மதியம் 2 மணி வரை **ஆன்மீக உரை** - தேவாலய மண்டபம் |
| ஞாயிறு | 04 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00 பக | திருப்பலி (த) (முகிபுவ ஆசிரியர்கள்)<br>திருப்பலி (ஆ) (புனித மார்ட்டின்)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம் ) |
| திங்கள் | 05 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 06 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 07 | 6.45 கா | திருப்பலி | |
| வியா | 08 | 6.45 கா | திருப்பலி | *மாலை 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (த) வனத்து சின்னப்பர் சிற்றாலயம் (ரகாங்)* |
| வெள் | 09 | காலை திருப்பலி நடைபெறாது | | *மாலை 7.30 மணி திருமணி ஆராதனையும் திருப்பலியும் (ஆ) முதல் வெள்ளிக்கிழமை* |

**பொதுக்காலம் 32ஆம் ஞயிறு**
1 அரசர்: 17: 10 - 16 தி.பா: 145: 6c- 7, 8 - 9a, 9bc-10 எபிரேயர்: 9: 24 - 28 மாற்கு: 12: 38 - 44 (12: 41-44)
**"என் நெஞ்சே ! நீ ஆண்டவரைப் போற்றிடு" - திபா 145**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 10 | 5.00 மா<br>5.30 மா<br>5.45 மா<br>6.00 மா | செபமாலை /நவநாள்/<br>நற்கருணை ஆசீர்வாதம்/ திருப்பலி<br>(புனித யோசேப்பு) | **விவிலியக் கல்வி (Bible Knowledge) :** மதியம் 2.30 மணி ஆலய மண்டபம் மேல் அறை |
| ஞாயிறு | 11 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00 பக | திருப்பலி (த) (மார்ஜெரி)<br>திருப்பலி (ஆ) (இளைஞர்கள்)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தேமொழி) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 8.45 - 10.15 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

**2018 அக்டோபர் (ஐப்பசி) மாத செய்திகள் / நிகழ்வுகள்**

i) **ஆலய காணிக்கை**
27 & 28 அக்டோபர் ரிம:8,485.00

இறைவன் அனைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

i) நவம்பர் 3/4 திருப்பலிகளில் சமூக அக்கறைப் பணிக்குழுவினரின் பணிக்காக இரண்டாவது காணிக்கை எடுக்கப்படும்.

ii) வின்செண்ட் டி போல் இயக்கத்தினரின் 2019 ஆம் ஆண்டுக்கான நாட்காட்டி விற்பனையில் உள்ளது. விலை ரிம:12.00. வாங்கி ஆதரவு தாருங்கள்

- **கிறிஸ்துவ சபைகளுக்கிடையிலான ஒன்றுகூடல் (ICCF)-** நடனத்தோடு கூடிய கிறிஸ்மஸ் விருந்து - 15-12-2018 மின்கோக் உணவகம் தொடர்பு: மார்ஜொரி 018- 395 0546
- **ஹரி டோலரன்சி செதுனியா 2018 -** நெகிரி ஒற்றுமைப் பணிக்குழு ஒற்றுமை ஓட்டத்தை ஏற்பாடு செய்கிறது. நாள்:17-11-2018(சனி) காலை 7.30 - விளையாட்டு மையம், பாரோய் அரங்கம், நெ.செ. பதிவு: மினவுதல் தேவாலய அலுவலகம்.
- **170 ஆம் ஆண்டு நிறைவு - கார்னர் ஸ்டோன் "காஃபி டேபிள் "**புத்தகம் ஒன்றின் விலை ரிம:40.00 திருப்பலிக்குப் பின் அல்லது பங்கு அலுவலகத்தில் வாங்கிக்கொள்ளலாம்.

**இன்று திருப்பலியை வழிநடத்திய முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு ஆசிரியர்களுக்கு நமது நன்றிகள்.**

- **உலக ஏழைகளின் தினம்** - நவம்பர் 17,2018 (சனி) காலை 11.00 - 4.00 வரை - மதிய உணவு மற்றும் ஒன்றுகூடல் ஆலய மண்டபத்தில் நடைபெறும். நவம்பர் 18, 2018 (ஞாயிறு) அனைத்து திருப்பலிகளிலும் சிறப்பு செபவழிபாடு. கூடுதல் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள: ஸ்டீபன் டெனிசாப்பு (016-611 0681)
- **கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி (Catechism of the Catholic Church - CCC)** நம் அனைவருக்கும் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பற்ற பரிசு. இதில் அடங்கியிருக்கும் அரிய பொக்கிஷங்களைக் கண்டுகொள்ள வாருங்கள். பங்கு மக்கள் அனைவருக்கும் குறிப்பாக, மறைக்கல்வி / முகிபுவ வகுப்பு ஆசிரியர்கள் / நற்கருணைப் பணியாளர்கள் /அதிச ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அனைவருக்கும் உகந்த ஒரு சிறப்பு உரை: வழங்குபவர்: டாக்டர் ஸ்டீவன் செல்வராஜு (API Director) நாள்: 24-11-2018 (சனிக்கிழமை) நேரம்: காலை 9.00 - 4.00 வரை - பதிவு மறைக்கல்வி அலுவலகத்தில் நடைபெறும் பதிவுக்கு இறுதி நாள்: 18-11-2018 (நுழைவு இலவசம்) தொடர்புக்கு: அந்தோணி பரம் 012- 662 0949
- **உங்கள் உடைமைகளை திருடர்களிடமிருந்து பாதுகாத்துக்கொள்ளுங்கள்.** குறிப்பாக இரண்டு சக்கர மோட்டார் வண்டிகள் மற்றும் தலைக்கவசங்களைப் பத்திரமாகப் பூட்டி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- **சமயங்களுக்கிடையிலான உரையாடல் மற்றும் தூதுப்பணி -** 16-18 நவம்பர், இடம்: API, கோலாலம்பூர்.தொடர்பு: ஷெலட் 012-210 0076 (அ) கிறிஸ்டோபர் 019 621 6194
- **வேற்றுமையில் ஒற்றுமை** அனைவருக்கும் ஒற்றுமையைப் பற்றிய நிகழ்ச்சி நெகிரி செம்பிலான் சத்ய சாய் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நிகழ்ச்சி ஏற்பாடு: மெந்திரி பெசார் அலுவலகம் மற்றும் அனைத்து சமயங்களின் குழுவினர்; நாள்:23-11-2018 (வெள்ளிக்கிழமை) இடம்: சிரம்பான் நகராண்மைக் கழக மண்டபம். அனைவரும் வந்து கலந்து கொள்ள அழைக்கிறோம்.

- **நவம்பர் 10 & 11, 2018** திருப்பலிகளில் இயற்கைப் பேரிடரில் பாதிக்கப்பட்டோருக்கு உதவி செய்ய இரண்டாவது காணிக்கை எடுக்கப்படும்.
- **முதல் நற்கருணை அருளடையாளக் கொண்டாட்ட முகாம்** - நவம்பர் 10 & 11, 2018. ஒப்புரவு அருளடையாளம் நவம்பர் 17, 2018 (சனி) காலை 9.00 மணி
- **கிறிஸ்மஸ் கொண்டாட்டத்திற்காக ஆலயம் மற்றும் சுற்றுப்புறத்தை சுத்தப்படுத்துதல்:** 20-11-2018 காலை 9 -12.00 (பகல்) வரை
- **அதிதூதர் மிக்கேல் அவர்களை நோக்கி செபம்** - திருத்தந்தை கேட்டுக்கொண்டது போல திருச்சபைக்கும் அதன் பாதுகாப்புக்கும் செபிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இந்த செப அட்டையை பெற்றுக்கொள்ளுங்கள்.
- **குருக்களின் மாதாந்திர தியானம் நவம்பர் 20 & 21**
- **திருவருகைக் கால ஒப்புரவு அருளடையாளம்:** மினவுதல் தேவாலயம், 26-11-2018 (திங்கள்) மாலை 7.00 மணி

***தீபாவளி திருநாளைக் கொண்டாடும் இந்து சகோதர சகோதரிகளுக்கு நம்முடைய தீபாவளி நல்வாழ்த்துகள்.***
***தீப ஒளி உங்களை வழிநடத்தவும், ஆசீர்வதிக்கவும் வாழ்த்துகிறோம்.***